புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 PRGI.No.PNTAM/26/A7529 GSTIN: 33KXSPK6994Q1ZX

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com
ஆசிரியர்: K.சபியுல்லா

மலர்: 02 | இதழ்: 96 | 11-10-2026 | ஞாயிறு | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி
Volume 02 | Issue: 96 | 11-10-2026 | Sunday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## டெல்லி போராட்டத்தில் எம்.ஏ.பேபி, டி.ராஜா உள்பட கம்யூ. தலைவர்கள் கைது: இடதுசாரிகள் கண்டனம்



சென்னை: அக்.11–

தலைமைத் தேர்தல் ஆணையரைப் பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி டெல்லியில் நடைபெற்ற போராட்டத்தில் இடதுசாரித் தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இதற்கு கண்டனம் தெரிவித்து தமிழகத்தில் கண்டன இயக்கங்கள் நடத்தப்படும் என இடதுசாரிக் கட்சிகள் அறிவித்துள்ளன.

சிபிஐ(எம்), சிபிஐ, சிபிஐ(எம்.எல்) லிபரேசன் இடதுசாரி கட்சிகள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கை: “தலைநகர் டெல்லியில் காவல் துறை, துணை ராணுவப்படையினர் கடுமையான அடக்குமுறையில் ஈடுபட்டுள்ளனர். தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்யக் கோரி இன்று டெல்லியில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சி சார்பில் ஜந்தர் மந்தரில் போராட்டத்துக்கு அறைகூவல் விடுக்கப்பட்டிருந்த பின்புலத்தில் கைது வேட்டையும், தாக்குதல்களும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

கரப்பான் பூச்சி ஜனதா கட்சி போராட்டத்திற்கு இடதுசாரிக் கட்சிகளும் வெகுஜன அமைப்புகளும் ஆதரவைத் தெரிவித்து இருந்தன. டெல்லிக்கான 254 ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. 54 மெட்ரோ ரயில் நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. 35000 காவல்படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். அமைதியான முறையில் போராட்டம் நடத்த உரிமை உண்டு என்ற உச்சநீதிமன்றத்தின் அறிவுரை கூட செவிமடுக்கப்படவில்லை.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் டி.ராஜா மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (எம்.எல்) லிபரேசன் கட்சித் தலைவர்களும், முன்னணி ஊழியர்களும் டெல்லியில் கைதாகி உள்ளனர். இடதுசாரி வாலிபர், மாணவர், அமைப்புகளின் தலைவர்கள், முன்னணி ஊழியர்களும் கைதாகி உள்ளனர். கைது செய்யப்பட்டவர்களை சில மணி நேரங்களாக காவல் வாகனத்தில் வைத்துக் கொண்டே சுற்றி வருகிறார்கள்.

ஜந்தர்மந்தர் பகுதியில் ஒன்றிய அரசின் டெல்லி போலீசார் மற்றும் துணை ராணுவப் படையினர் கடுமையான அடக்குமுறைகளை ஏவி விட்டுள்ளனர். போராட்டக்காரர்களை ஒன்று சேர விடாமல் ஆங்காங்கே கைது செய்துள்ளனர். கட்சி, வெகுஜன அமைப்பு அலுவலகங்கள் துணை ராணுவப் படையாலும், ஒன்றிய அரசின் காவல்துறையினாலும் முற்றுகையிடப் பட்டு உள்ளன. ஜனநாயக மறுப்பின் உச்சகட்டமாக அரங்கேற்றப்பட்டுள்ள இத்தகைய தாக்குதல்களை இடதுசாரிக் கட்சிகள் வன்மையாக கண்டிக்கின்றன.

இந்த அடக்குமுறை, கைதைக் கண்டித்தும், ஞானேஷ் குமார் பதவி நீக்கத்தை வலியுறுத்தியும் தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் ஆங்காங்கே இடதுசாரிக் கட்சிகள் சார்பில் உடனடியாக கண்டன இயக்கங்கள் நடத்திட இடதுசாரி கட்சிகளின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்” என்று அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# பிரதமர் மோடி வருகையை முன்னிட்டு சென்னையில் 15,000 போலீஸார் குவிப்பு

## 5 அடுக்கு பாதுகாப்பு, ட்ரோன்கள் பறக்க தடை

சென்னை: அக்.11

பிரதமர் நரேந்திர மோடி இன்று (அக்.11) சென்னை வருகிறார்.

சென்னை மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டப் பணிகளின் ஒரு பகுதியாக நிறைவடைந்துள்ள பூந்தமல்லி வடபழனி வரையிலான 14.64 கி.மீ. தொலைவிலான சேவையைத் தொடங்கி வைக்கிறார். பின்னர் முதல்வர் விஜய்யுடன் பூந்தமல்லியில் இருந்து போரூர் வரை மெட்ரோ ரயிலில் இணைந்து பயணம் செய்கிறார்.

மேலும் ஐஐடியில் இயங்கி வரும் 10க்கும் மேற்பட்ட முன்னணி ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் நிறுவனர்களை சந்தித்து கலந்துரையாடுகிறார். பின்னர் `இசைஞானி இளையராஜா இசை கற்றல் மற்றும் ஆராய்ச்சி மையத்தை’ பிரதமர் திறந்து வைக்கிறார். பல்வேறு தேசிய நெடுஞ்சாலை திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்து, புதிய





திட்டப் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டுகிறார்.

`அம்ரித் பாரத்’ திட்டத்தின் கீழ், தெற்கு ரயில்வேயில், மேம்படுத்தப்பட்ட பழநி, பரமக்குடி, நாமக்கல், அம்பாசமுத்திரம், வேலூர் கன்டோன்மென்ட் ரயில் நிலையங்கள், கோவை பகுதியில் 3 ரயில்வே மேம்பாலங்கள் மற்றும் காரைக்கால் பேரளம் இடையே 23 கி.மீ. புதிய ரயில் பாதை என ரூ.700 கோடி மதிப்பிலான திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைக்கிறார். அது மட்டுமல்லாமல் விமான நிலையத்தில் இருந்து பரங்கிமலை ராணுவ மைதானம் வரை, சைதாப்பேட்டை நீதிமன்றம் அருகில் இருந்து அண்ணா பல்கலை. வரை `ரோடு ஷோ’ செல்கிறார்.

பிரதமரின் சென்னை வருகையை ஒட்டி 15 ஆயிரம் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட உள்ளனர். மேலும் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பு காரணங்களுக்காக 11ம் தேதி மீனம்பாக்கம், கிண்டி, கோட்டூர்புரம், போரூர், நந்தம்பாக்கம் ஆகிய பகுதிகள் மற்றும் பிரதமர் பயணிக்கும் வழித்தடங்கள் சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அதோடு இந்த பகுதிகளில் ட்ரோன் கேமராக்கள் மற்றும் ஆளில்லா வான்வழிக் கருவிகள் பறக்கவிடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. பிரதமர் செல்லும் அனைத்து பகுதிகளும் போலீஸாரின் கண்காணிப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இதுமட்டும் அல்லாமல் லாட்ஜ்கள், தங்கும் விடுதிகள், ஒட்டல்களில் தங்கியுள்ளவர்கள் குறித்தும், முக்கிய சாலைகளில் தீவிர வாகன சோதனையிலும் போலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

## “டெல்லி கைது நடவடிக்கைகள் ஜனநாயகத்தையே அழிக்கும் செயல்” : மு.க.ஸ்டாலின் கண்டனம்

சென்னை: அக்.11–

“ஜனநாயகத்தைக் காப்பதற்காக எழும் குரலை ஒடுக்குவது ஜனநாயகத்தையே அழித்துவிடும்” என டெல்லியில் போராடுபவர்கள் மீதான கைது நடவடிக்கைகளைக் கண்டித்துப் பதிவிட்டுள்ளார் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின்.



இது தொடர்பாக அவர் தனது சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், “நேற்று டெல்லியில் அரங்கேறி வரும் நிகழ்வுகளும், அமைதிவழியில் போராடுபவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறைகளும், நான் அனுபவித்த நெருக்கடி நிலைக் காலத்தின் வலிமிகுந்த நினைவுகளை மீண்டும் கண்முன் கொண்டு வருகின்றன.

டெல்லியிலும் நாடு முழுவதிலும் கைது செய்து வைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்கள், மாணவர்கள், போராடும் இளைஞர்கள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் போராடும் மாணவர்கள் மீது, பாஜகவின் கிளையாகச் செயல்பட்டுக் கொண்டு, காவல்துறை அடக்குமுறையை ஏவிவிடும் தவெக அரசையும் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

அமைதிவழியில் போராடுவதற்கான தங்களது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தும் இளைஞர்கள் மீதான தாக்குதலை ஒன்றிய அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். எதிர்ப்பை வெளிப்படுத்துவது குற்றமல்ல. ஜனநாயகத்தைக் காப்பதற்காக எழும் குரலை ஒடுக்குவது ஜனநாயகத்தையே அழித்துவிடும்.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் என்பதில் எந்த சமரசத்துக்கும் இடமில்லை. அவர் பதவி விலகுவதோடு மட்டுமல்லாமல், தேர்தல் ஆணையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள அனைத்து பாதிப்புகளும் சரிசெய்யப்பட்டு, அதன் சுதந்திரமும் நேர்மையும் மீட்டெடுக்கப்பட வேண்டும்” என்று பதிவிட்டுள்ளார்.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி டெல்லியில் நேற்று (அக்.10) சிஜேபி சார்பில் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. இந்தச் சூழலில் போராட்டத்துக்கு டெல்லி காவல்துறை அனுமதி மறுத்துள்ளது. இதனால், அதிரடி கைது நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

ஜந்தர் மந்தர் மற்றும் மத்திய டெல்லி பகுதியை இணைக்கும் பல்வேறு முக்கிய சாலை சந்திப்புகளில் டெல்லி போலீஸார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

டெல்லியில் ஜந்தர் மந்தர் மற்றும் அந்த பகுதியை ஒட்டிய இடங்களில் காணப்படும் போராட்டக்காரர்களை தடுத்து நிறுத்தும் காவல் துறையினர், அவர்களை கைது செய்தும் வருகின்றனர். பெண்கள் அதிகளவில் இந்த போராட்டத்தில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்ற காரணத்தால் ‘பிங்க் மகளிர் காவல் படை’யினரும் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர்.

சிஜேபி போராட்டத்தில் யூடியூபர் துருவ ராட்டி பங்கேற்க வாய்ப்புள்ளது என்று கருதப்படும் நிலையில், குருகிராமில் அவரை போலீஸார் கைது செய்துள்ளனர். அவரை போலீஸார் எங்கு கொண்டுசென்றுள்ளனர் என்ற தகவலும் கிடைக்கவில்லை. இதற்கு சிஜேபி கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேலும், ஒற்றை நபரை காக்க மத்திய அரசு அதன் படை பலத்தை பயன்படுத்துகிறது. இதனால் டெல்லி முடங்கியுள்ளது என்று ஆம் ஆத்மி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.

அந்த வரிசையில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலினும் தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளார்.

## இந்திய இளைஞர்களே, தொடர்ந்து போராடுங்கள்; நாங்கள் துணை நிற்கிறோம்’ : ராகுல் காந்தி

புதுடெல்லி,

இந்திய தலைமை தேர்தல் ஆணையாளர் ஞானேஷ் குமார், மற்ற இரு ஆணையாளர்களின் ஆலோசனைகளை கவனத்தில் கொள்ளாமல் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணியில் தன்னிச்சையாக செயல்பட்டதாக புகார்கள் எழுந்தன. இதனையடுத்து ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் எனக்கோரி, பல்வேறு அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்..ஜந்தர் மந்தர்இந்த நிலையில், டெல்லி ஜந்தர் மந்தர் பகுதியில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் நேற்று போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக அறிவித்திருந்தனர். இதனை முன்னிட்டு வன்முறை எதுவும் பரவாமல் தடுப்பதற்காக டெல்லியில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. .மேலும் போராட்டம் தொடங்குவதற்கு முன்பாகவே அரசியல் கட்சி தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பலர் காவல்துறையினரால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.ஜந்தர் மந்தர் நோக்கி செல்ல முயன்ற இளைஞர்களை போலீசார் தடுத்து நிறுத்தி காவல்துறைவாகனங்களில் அழைத்து சென்றனர். .தடுப்புக் காவல்கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் தலைவர் அபிஜித்திப்கே டெல்லிக்கு வந்திறங்கிய விமானத்திலேயே காவல்துறையினரால் தடுப்புக் காவலில் எடுக்கப்பட்டார். அதே போல், மாணவர் சங்க தலைவர் நேஹா போரா, வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன், ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவர்கள் மணீஷ் சிசோடியா, திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி உள்ளிட்ட பலரும் போலீசாரால் காவலில் எடுக்கப்பட்டுள்ளனர்..ராகுல் காந்திஇந்த நிலையில், இந்திய இளைஞர்களுக்கு துணை நிற்பதாகவும், அவர்கள் போராட்டத்தை தொடர வேண்டும் எனவும் காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக‘எக்ஸ்’ தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது; .கோழைத்தனம்“நான் கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக ஆர்.எஸ்.எஸ். மற்றும் நரேந்திர மோடியை எதிர்த்து போராடி வருகிறேன். அவர்களைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அவர்களின் அடிப்படை குணம் கோழைத்தனம்.இந்த கதையின் வில்லன்களான நரேந்திர மோடி, அமித்ஷா, மோகன் பகவத், ஞானேஷ் குமார் மற்றும் அஜித் தோவல் ஆகியோர், தங்களைச் சுற்றியுள்ள பாதுகாப்பு அரண் கொஞ்சம் கொஞ்சமாக சுருங்கி வருவதை உணர்கிறார்கள். பிரதமர் மோடி அவர்களே, நீங்கள் விரும்பியதைச் செய்யுங்கள். காவல்துறையினரை வரவழையுங்கள்: 10 ஆயிரம், 20 ஆயிரம், 50 ஆயிரம் என நீங்கள் விரும்பும் எண்ணிக்கையில் போலீசாரை வரவழைத்து அனைத்துதலைவர்களையும்கைது செய்யுங்கள். அனைத்து இளைஞர்களையும் கைது செய்யுங்கள்.எங்கள் அனைவரையும் கைது செய்யுங்கள். .தகவல்கள் கிடைத்துவிட்டனநாங்கள் உங்களை சூழ்ந்துவிட்டோம்.இனி நாங்கள் பின்வாங்கப் போவதில்லை. நான் சொல்வதை குறித்துக் கொள்ளுங்கள்: எங்களுக்குத் தேவையான தகவல்கள் அனைத்தும் ஏற்கனவே எங்களுக்கு கிடைத்துவிட்டன. நாங்கள் நமது அரசியலமைப்பை பாதுகாக்கப் போகிறோம். இந்திய மக்களின் குரலை பாதுகாக்கப் போகிறோம். கடந்த 10 15 ஆண்டுகளில் இந்தியாவிற்கு இழைக்கப்பட்ட கொடுமைகள், இனி ஒருபோதும்மீண்டும்நிகழாமல் நாங்கள் பார்த்துக் கொள்வோம்.. தொடர்ந்து போராடுங்கள் இந்திய இளைஞர்களே,உங்களை நினைத்து நான் பெருமைப் படுகிறேன். தொடர்ந்துபோராடுங்கள். நாங்கள் உங்களுக்குத் துணை நிற்கிறோம். இந்த ஆட்சியும், நமது அரசியலமைப்பைத் தாக்கியவர்களும் தோற்கடிக்கப்படுவதை நாங்கள் உறுதி செய்வோம்.”இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# அக்டோபர் 31 மாவட்டத் தொழில்மையங்களில்ஆர்ப்பாட்டம் ஏஐடியுசி மாநில. மாநாடு தீர்மானம்







ஓசூர் அக் 11

கிருஷ்ணகிரி மாட்டம் ஓசூரில் தமிழ்நாடு ஏஐடியுசி சங்க 21வது மாநில மாநாடு அக்டோபர் 9,10,11 ஆகிய தினங்களில் சுந்தரராஜன் நினைவரங்கத்தில் நடைபெற்று வரும் இரண்டாவது நாள் பிரதிநிதிகள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தமிழ்நாடு அரசு தனது தொழிலாளர் கொள்கையை விரிவாக அறிவிக்கவேண்டும்.

மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம், கட்டிட உடலுழைப்புத் தொழிலாளர் வாரியங்கள் உள்ளிட்ட அனைத்து முத்தரப்புக்குழுக்களையும் உடனே நியமித்து செயல்படுத்த வேண்டும்.

அரசுத்துறைகள், அரசு சார்ந்த தொழில்களில் காண்ட்ராக்ட், அவுட்சோர்ஸ் முறைகளை முற்றாக அகற்றி, தமிழ்நாடு நிரந்தரத் தகுதி வழங்குதல் சட்டப்படி இரண்டு ஆண்டுகளில் 480 நாட்கள் பணிபுரிந்த அனைவரையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும். தனியார் நிறுவனங்களிலும் இதனை அமுலாக்க உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். காலிப்பணியிடங்களை நிரந்தரப் பணியாளர்களை நியமித்து நிரப்ப வேண்டும்.

குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ், ரூ 42,000 என குறைந்தபட்ச ஊதியத்தை அகவிலைப்படியோடு சேர்த்து அறிவிக்கை செய்து, உறுதியாக அமுல் நடத்த வேண்டும்.

கட்டிடம் மற்றும் உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கு நலவாரிய நிதிப்பலன்களை தாமதமின்றி உயர்த்த வேண்டும்.

பெண் தொழிலாளர்கள் நலனில் அக்கறை செலுத்த வேண்டும். உழைக்கும் பெண்களின் மாதவிடாய் விடுப்பை உறுதிப்படுத்தத் தமிழ்நாடு அரசு தனிச் சட்டம் இயற்ற வேண்டும். அரசு, தனியார் துறைகளில் பணிபுரியும் ஒப்பந்த, தற்காலிகத் தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து பெண் தொழிலாளர்களுக்கும், மகப்பேறு நலச் சலுகைகள் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். அமைப்புசாராத் துறை பெண் தொழிலாளர்களுக்கு நலவாரியங்கள் மூலம் ஆறு மாத ஊதியத்துடன் கூடிய மகப்பேறு உதவித்தொகை வழங்க வேண்டும் உள்ளிட்ட துறைவாரியான கோரிக்கைகளை வலியுறுத்தி ஏஐடியுசியின் 107வது அமைப்பு நாளான 2026, அக்டோபர் 31ம் தேதியன்று மாவட்டத் தலை நகர்கள், தொழில்மையங்களில் ஆர்ப்பாட்டம் நடத்துவதென்றும், 2026, டிசம்பர் 13 முதல் 20ம் தேதி வரை, அனைத்து மாவட்டங்களிலும், ஏஐடியுசியுடன் இணைக்கப்பட்ட சங்கங்கள் அனைத்தும் தும் இணைந்து, தொழிலாளர்கள், பொதுமக்கள் மத்தியில் விரிவான பரப்புரை இயக்கத்தை நடத்துவதென்றும் 2027ல் தமிழ்நாடு சட்டப்பேரவையின் நிதிநிலைக் கூட்டத் தொடரின்போது மறியல் போராட்டத்தை நடத்துவது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன

# போச்சம்பள்ளியில் தவெக கட்சி சார்பில் தாராபுரம் மற்றும் மதுராந்தகம் ஆகிய இரு சட்ட மன்றத் தொகுதிளிலும் வெற்றிப்பெற்றதைத் தொடர்ந்து பட்டாசு வெடித்தும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது.





கிருஷ்ணகிரியில் கிழக்கு மாவட்டம் போச்சம்பள்ளியில் தவெக கட்சி சார்பில் தாராப்புரம் மற்றும் மதுராந்தகம் ஆகிய இரு சட்ட மன்றத் தொகுதிளிலும் நடைபெற்ற இடைத்தேர்தலில் தவெக வேட்பாளர்களான

மரகதம் மற்றும் சத்தியபாமா ஆகிய இருவரும் மகத்தான வெற்றிப் பெற்றுள்ளதை அடுத்து கிருஷ்ணகிரி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பட்டாசு வெடித்து உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது,

இதன் ஒரு பகுதியாக கிருஷ்ணகி கிழக்கு மாவட்ட செயலாளர் முரளிவிஜய் கலந்து கொண்டு போச்சம்பள்ளி ஒன்றிய செயலாளர் வெங்கடேசன் தலைமையில் நடைப்பெற்ற இந்த வெற்றிக் கொண்டாட்டத்தில்திரண்ட தொண்டர்கள், இனிப்புகள், மற்றும் பட்டாசுகளை வெடித்தும் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

அப்போது போச்சம்பள்ளி நான்கு முனை சந்திப்பில் பகுதியில் ஒன்று திரண்டு தவெக கட்சியினர் தமிழக முதல்வருக்கும் காங்கிரஸ் மற்றும் கூட்டணி கட்சிகளுக்கும் தங்களது நன்றியினை தெரிவித்து கோஷங்களை எழுப்பி பொது இனிப்புகள் வழங்கினார்கள்,

இந்த வெற்றி கொண்டாட்டத்தின் போது தவெக கட்சி மாவட்ட பொருளாளர் மணி கண்டன், ஜெயசூர்யா, சண்முகம், சந்துரு, அரசு, பார்த்திபன், சுதாகர், காவேரிப்பட்டணம் ஒன்றிய செயலாளர் குமார் மற்றும் தவெக கட்சி சார்ந்த நிர்வாகிகள் ஏராளமானவர்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

# மத்தூரில் மின்வாரிய ஊழியர்களுக்கு பயிற்சி முகாம்: மழைக்கால பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி வட்டம் மத்தூர் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் மின்வாரிய கள பணியாளர்களுக்கான சிறப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது.

மின்வாரிய செயற்பொறியாளர் கவிதா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு உதவி செயற்பொறியாளர் மகாலட்சுமி, உதவி பொறியாளர்கள் பெருமாள் மற்றும் சின்னசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இப்பயிற்சி முகாமில் முதல் நிலை முகவர்கள், மின் பாதை ஆய்வாளர்கள், மின்கம்பி பணியாளர்கள், கேங்மேன் மற்றும் தற்காலிக பணியாளர்கள் உள்ளிட்ட பலர் ஆர்வமுடன் கலந்துகொண்டனர். இதில் மழை மற்றும் காற்று வீசும் காலங்களில் மின் கம்பங்கள் மற்றும் மின் சாதனங்களில் எவ்வாறு பாதுகாப்புடன் பணிபுரிவது என்பது குறித்து விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன.மின் விநியோகத் தடைகளை சீரமைக்கும் போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் நவீன பாதுகாப்பு உபகரணங்களின் பயன்பாடு குறித்து எடுத்துரைக்கப்பட்டது.அவசர காலங்களில் பொதுமக்களிடமிருந்து வரும் புகார்களை விரைந்து கையாள்வது குறித்தும் விபத்துகளை தவிர்க்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது குறித்து ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

பயிற்சியின் முடிவில் களப்பணியில் எழும் சந்தேகங்களுக்கு அதிகாரிகளால் விளக்கம் அளிக்கப்பட்டு பாதுகாப்பான முறையில் பணியாற்றுவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.



ஈரோடு மாவட்டம் அம்மாபேட்டை ஊராட்சிஒன்றியம், குருவரெட்டியூர் ஊராட்சி இழுப்பிலி கிராமத்தில் பனைவிதைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி நட்டு வைத்தார்.

# வந்தவாசி ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலில் மகாளய அமாவாசை தர்ப்பணம்: ஏராளமானோர் பங்கேற்பு...!




வந்தவாசி, அக் 11:

எல்லா மாதங்களில் வரும் அமாவாசை சிறப்பானதாக இருந்தாலும், புரட்டாசி மாதம் வரும் அமாவாசையை ‘மகாளய அமாவாசை” என்று சிறப்பித்து கூறுவார்கள்.

சாதாரண அமாவாசை தினங்களில் மூன்று தலைமுறை முன்னோருக்கு தர்ப்பணம் கொடுக்கப்படும். ஆனால், மகாளயபட்ச அமாவாசை தினத்தில், தாய்வழி மற்றும் தந்தைவழி முன்னோருக்கு மட்டுமின்றி மறைந்த நம் ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள், பங்காளிகள் மற்றும் ஏனைய அனைவருக்கும் இன்றைய தினத்தில் தர்ப்பணம் கொடுப்பதே மகாளய அமாவாசையின் தனி சிறப்பாக திகழ்கிறது.

அத்தகைய சிறப்பு வாய்ந்த மகாளய அமாவாசை சிறப்பு தர்ப்பணம் திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் திருக்கோயில் வளாகத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் வந்தவாசி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து சுமார் 700 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு தனது முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து வழிபாடு செய்தனர். மேலும் ஆலய குருமார்கள் சிறப்பு வழிபாட்டை அனைவருக்கும் வரிசையாக நடத்தினர்.

# பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ சேவை இன்று தொடக்கம்!

பூந்தமல்லி – வடபழனி இடையே 15 கி.மீ. தூரத்துக்கு அமைந்துள்ள 11 மெட்ரோ ரயில் நிலையங்களுக்கான சேவை இன்று மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரை இயக்கப்படும். தொடர்ந்து, தினமும் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும். இரு முனையங்களில் இருந்தும் கடைசி ரயில் இரவு 9 மணிக்குப் புறப்படும்.

# சட்டவிரோதமாக கள்ளசாராயம் தயாரித்த நபர் கைது

கிருஷ்ணகிரி மாவட்டம். சூளகிரி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட சின்னகொத்தூர் கிராமத்தில், கடந்த 13.09.2026 அன்று, சின்னகொத்தூர் கிராமத்தைச் சேர்ந்த சின்னப்பா என்பவரின் மகன் சென்னகிருஷ்ணன் (52) என்பவர் தனக்குச் சொந்தமான நிலத்தில் சட்டவிரோதமாக கள்ளச்சாராயம் தயாரித்துக் கொண்டிருந்தது தொடர்பாக, நம்பகமான தகவலின் பேரில் காவல் துறையினர் மேற்கொண்ட சோதனையில், 15 லிட்டர் ஊறல் மற்றும் 2 லிட்டர் கள்ளச்சாராயம் மற்றும் ஒரு SBML ரக நாட்டு துப்பாக்கி ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. இதையடுத்து, மேற்கண்ட எதிரி சென்னகிருஷ்ணன் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டார்.

இந்நிலையில், மேற்கண்ட எதிரி சென்னகிருஷ்ணன் என்பவருக்கு கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் பரிந்துரையின் பேரில், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவுப்படி, அன்று (09.10.2026) கள்ளசாராயம் தடுப்புச் சட்டத்தின் (Bootlegger) கீழ் கைது செய்யப்பட்டு, சென்னகிருஷ்ணன் சேலம் மத்திய சிறையில், அடைக்கப்பட்டார். எதிரி சென்னகிருஷ்ணன் சேலம் மத்திய சிறையில், அடைக்கப்பட்டார்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# ஆவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் இரண்டு ஆண்டுகளாக நிரந்தர அதிகாரி நியமனம் இல்லை பொதுமக்கள் கடும் அவதி : பத்திரப்பதிவு செய்யாததை கண்டித்து தர்ணா ஆர்ப்பாட்டம்




திருவள்ளூர் அக் 11 :

ஆவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக நிரந்தர சார்பதிவாளர் நியமிக்கப் படாததால், அங்கு வரும் பொதுமக்கள் மற்றும் முதியவர்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

இங்கு வாரத்தின் அனைத்து நாட்களிலும் முறையான நிரந்தர அதிகாரிக்கு பதிலாக, தற்காலிக அலுவலர்களே பணிகளை கவனித்து வருவதாக கூறப்படுகிறது. இதனால் ஆவணப் பதிவுகளில் ஏற்படும் தாமதம் காரணமாக, காலை 10 மணிக்கு அலுவலகத்திற்கு வருகை தரும் பொதுமக்கள் மாலை 3 மணி வரை பல மணி நேரம் காத்திருக்க வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், பொது மக்களின் சந்தேகங்களுக்கு உடனடியாக பதிலளிக்க கூட ஆளில்லை எனவும், ஆன்லைன் ஆவணப் பதிவுகள் முடிந்து ஆவணங்கள் கைக்குக் கிடைப்பதில் கால தாமதம் ஆவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இதுகுறித்து மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் பலமுறை நேரில் முறையிட்டும், உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனப் பொதுமக்கள் வேதனை தெரிவிக் கின்றனர். இதனால் ஆத்திரமடைந்த மக்கள் சார்பதிவாளர் அலுவலகம் முன்பு அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டனர்.இதனால் பரபரப்பான சூழல் ஏற்பட்டது. இதனை யடுத்து தகவலறிந்து வந்த காவல் துறை பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானம் செய்தனர். இது குறித்து பொதுமக்கள் மற்றும் பத்திரப்பதிவு எழுத்தாளர்கள் கூறுகையில்

சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் உடனடியாகத் தலையிட்டு ஆவடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நிரந்தர சார்பதிவாளரை நியமிக்க வேண்டும் என்றும், மக்களின் நீண்ட நாள் துயரத்தைப் போக்க விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கைகளை வைத்தனர்.

# தேனி வீரபாண்டி அருகே அரசு பேருந்து, டிராக்டர், கார் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து: இளம்பெண் உயிரிழப்பு!

தேனி: அக்.11–

தேனி மாவட்டம் வீரபாண்டி அருகே டிராக்டர்,கார் என அடுத்தடுத்த வாகனங்கள் மீது அரசுப் பேருந்து மோதி விபத்துக்குள்ளானதில் காரில் பயணித்த இளம்பெண் தமயந்தி(23)சம்பவஇடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். கம்பம் பகுதியிலிருந்து தேனி நோக்கி சென்ற அரசு பேருந்து வீரபாண்டி அருகே உள்ள வேலம்மாள் பள்ளி பகுதியில் உள்ள புறவழி சாலையில்வந்தபோதுஎதிரே வந்தடிராக்டர் மீது பேருந்து பயங்கரமாக மோதியதில் டிராக்டர் சுக்குநூறாக நொறுங்கியது.

இதில் டிராக்டர்க்கு பின்னால் திருச்சியிலிருந்து குச்சனூர் கோவிலுக்கு செல்வதற்காக குடும்பத்தினர் காரில் வந்து கொண்டிருந்தனர். இந்த விபத்தில் டிராக்டர் மீது கார் மோதியதில் காரில் பயணித்த தமயந்தி என்ற பெண் பரிதாபமாக உயிரிழந்தார். மேலும் இந்த விபத்தில், டிராக்டர் ஓட்டுநர் கவலைக்கிடமாக மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.இந்தவிபத்துகுறித்துவீரபாண்டி காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில் பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து நடந்ததாக தெரியவந்துள்ளது.

# தாமரைப்பாக்கத்தில் ஒரு கோடி பனை விதையை நடும் பணிகள் : மாவட்ட ஆட்சியர் ச.கவிதா, பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆர். பிரகாசம் ஆகியோர் தொடங்கி வைத்தனர்



திருவள்ளூர் அக் 11 :

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், தாமரைப்பாக்கம் காட்டாங்கல் கால்வாயின் கரையோரப் பகுதிகளில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தனியார் தன்னார்வ தொண்டு நிறுவனம் சார்பில் ஒரு கோடி பனை விதையை நடும் பணிகளை துவக்கி வைக்கும் விதமாக மாவட்ட ஆட்சியர் ச.கவிதா, பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.பிரகாசம் ஆகியோர் ஒரு இலட்சம் பனைவிதைகளை நட்டு வைத்து தொடங்கி வைத்து, கொசஸ்தலையாறு கரையோர பகுதிகளின் வரைபடங்களை பார்வையிட்டனர். பின் மாவட்ட ஆட்சியர் கூறியதாவது :

ஒரு கோடி பனை விதைகள் நடும் பணி' என்பது தமிழ்நாட்டின் மாநில மரமான பனை மரங்களைப் பாதுகாக்கவும், நீர்நிலைகளைப் பலப்படுத்தவும் கிரீன் நீடா சுற்றுச்சூழல் அமைப்பால் தொடங்கப்பட்ட ஒரு மாபெரும் சுற்றுச்சூழல் திட்டமாகும். இந்தத் திட்டத்தின் நோக்கம், தமிழகக் கடற்கரையின் மண் அரிப்பைத் தடுப்பது, நீர்நிலைகளின் கரைகளைப் பலப்படுத்துவது, நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவது மற்றும் பனை சார்ந்த மதிப்பு கூட்டுப் பொருட்கள் உற்பத்தியைப் பெருக்கி வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது இதன் முக்கிய நோக்கமாகும். இந்த ஆண்டு இப்பணியை கிரீன் நீடா சுற்றுச்சூழல் அமைப்பு, தனியார் தொண்டு நிறுவனம், மாநில நாட்டு நலப்பணித் திட்டம், தனியார் நிறுவனம் ஆகியவை இணைந்து பல்வேறு கல்லூரிகள், நாட்டு நலப்பணித்திட்டம், தேசியப்படை மாணவர்களுடன் இந்த மாபெரும் பணியை மேற்கொண்டு வருகின்றனர். தமிழகத்தின் நீண்ட கடற்கரைப் பகுதிகள் மற்றும் உள்மாவட்ட நீர்நிலைகளின் ஓரங்களில் பனை விதைகள் நடப்பட்டன என மாவட்ட ஆட்சியர் கூறினார்.

பின்னர், பாக்கம் ஊராட்சி கசுவா கிராம பகுதியில் செயல்படும் தனியார் முதியோர் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு தொண்டு நிறுவனத்தில் சமூக நலன் (ம) மகளிர் உரிமைத்துறை சார்பில் மாவட்ட அளவிலான சர்வதேச முதியோர் தின விழாவை துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் முதியோர்களுக்கு கேக்கும், நினைவு பரிசினையும் வழங்கினார்.

இதில் கொசஸ்தலையாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் இராதாகிருஷ்ணன், இணை இயக்குநர் (வேளாண்மை) க. செல்வராஜு, மத்திய காவல் படை காவல் துறை துணை தலைவரும் முதல்வருமான எம்.தினகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) க.வேதவல்லி, மாவட்ட சமூக நல அலுவலர் சோ.வனிதா, உதவி செயற்பொறியாளர் செந்தில், உதவி பொறியாளர் உஷா, தனியார் தொண்டு நிறுவன தலைவர் செந்தூர்பாரி, செயலாளர் மோகன், திருவள்ளூர் வட்டாட்சியர் சரண்யா, மத்திய காவல் படை வீரர்கள், முதியோர்கள், மாணவர்கள், தனியார் தொண்டு நிறுவன பிரதிநிதிகள் மற்றும் பல்துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தாராபுரம், மதுராந்தகம் இடைத்தேர்தல் வெற்றி: தவெகவின் உற்சாகக் கொண்டாட்டம் மத்தூரில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி பட்டாசு வெடித்து கொண்டாட்டம்



தமிழகத்தில் நடைபெற்ற தாராபுரம் மற்றும் மதுராந்தகம் ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்களிலும் தமிழக வெற்றிக் கழகத்திற்கு பொதுமக்கள் அமோக வெற்றியை வழங்கியுள்ளனர். இதனை தொடர்ந்து தவெகவினர் உற்சாகக்கொண்டாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, கிருஷ்ணகிரி தென்கிழக்கு மாவட்ட செயலாளரும், ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினருமான மருத்துவர் இளையராஜா அவர்களின் ஆணைக்கிணங்க, மத்தூர் ஒன்றிய செயலாளர் சக்தி, விக்னேஷ் மற்றும் சிவா தலைமையில் மத்தூர் பேருந்து நிலையத்தில் கோலாகலமாக கொண்டாட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட பொருளாளர் தாமோதரன் மற்றும் மாவட்ட துணை செயலாளர் கீர்த்தனா செயற்குழு உறுப்பினர் இப்ராஹிம் அர்ச்சனா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த கொண்டாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர், நகர, கிளை கழக நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் திரளாக கலந்துகொண்டனர். அப்போது பேருந்து நிலையத்தில் பட்டாசுகள் வெடித்து, அவ்வழியாக சென்ற பொதுமக்களுக்கும் வாகன ஓட்டிகளுக்கும் இனிப்புகள் வழங்கி தங்களது மகிழ்ச்சியை உற்சாகமாக வெளிப்படுத்தினர்.

# கிருஷ்ணகிரி மாவட்ட அளவிலான குண்டு எறிதல் போட்டியில் அகரம் அரசு பள்ளி மாணவன் முதலிடம்! மாநில அளவிலான போட்டிக்குத் தேர்வு - பள்ளி வரலாற்றில் புதிய சாதனை!




கிருஷ்ணகிரி அக்.11

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அடுத்த அகரம் அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவன் மாவட்ட அளவில் நடைபெற்ற தடகளப் போட்டியில் குண்டு எறிதல் பிரிவில் முதலிடம் பிடித்து பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

அகரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயின்று வரும் மாணவர் ஸி. சிமண்குமார், 19 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் நடைபெற்ற குண்டு எறிதல் போட்டியில் தனது திறமையை வெளிப்படுத்தி முதலிடத்தைப் பெற்றுள்ளார். இதன் மூலம் அடுத்ததாக நடைபெறவுள்ள மாநில அளவிலான போட்டியில் பங்கேற்கவும் அவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்த வெற்றி அகரம் அரசு மேல்நிலைப் பள்ளி வரலாற்றில் முதன் முறையாகப் பதிவாகியுள்ள சாதனை என்பது குறிப்பிடத்தக்கது. மாணவரின் விடாமுயற்சி, தொடர் பயிற்சி மற்றும் விளையாட்டின் மீதான ஆர்வம் ஆகியவை இந்த வெற்றிக்குக் காரணமாக அமைந்துள்ளன.

மாவட்ட அளவில் முதலிடம் பெற்று மாநில அளவிலான போட்டிக்குத் தகுதி பெற்ற மாணவர் சிமண்குமாருக்கு பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டுகளைத் தெரிவித்தனர். மேலும், பள்ளியின் சக மாணவர்கள் மற்றும் கல்வி சார்ந்த அனைவரும் அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

இந்தச் சாதனையை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றிய உடற்கல்வி ஆசிரியர் பத்மாவதி அவர்களுக்கும் பாராட்டுகள் குவிந்து வருகின்றன. மாணவரின் திறமையை அடையாளம் கண்டு, அவருக்குத் தொடர்ந்து பயிற்சி அளித்து, போட்டிக்குத் தயார்படுத்திய ஆசிரியரின் அர்ப்பணிப்பும் இந்த வெற்றியில் முக்கியப் பங்கு வகித்துள்ளது.

அரசுப் பள்ளி மாணவர்களும் விளையாட்டுத் துறையில் முறையான பயிற்சியும் ஊக்கமும் கிடைத்தால் மாவட்டம் மற்றும் மாநில அளவில் சாதிக்க முடியும் என்பதற்கு மாணவர் சிமண்குமாரின் வெற்றி சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

மாநில அளவிலான போட்டியிலும் சிறப்பாகச் செயல்பட்டு வெற்றிபெற்று, அகரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கும் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கும் மேலும் பெருமை சேர்க்க வேண்டும் என ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

# அரசு கல்லூரியில் போதைப்பொருள் தடுப்பு மற்றும் உணவுப்பொருள் கலப்பட விழிப்புணர்வுக் கருத்தரங்கம்






புதுக்கோட்டை, அக். 11–

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் அருகே பெருநாவலூரில் இயங்கி வரும் அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டமும், கல்லூரி போதைப்பொருள் தடுப்புக்குழுவும் இணைந்து 'வலிமையான பாரதம் ஆரோக்கியமான இளைஞர்கள் கையில்' எனும் தலைப்பில் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு மற்றும் உணவுப்பொருள் கலப்பட விழிப்புணர்வு குறித்த கருத்தரங்கை, கல்லூரித் திருவள்ளுவர் அரங்கத்தில் நடத்தின.

கல்லூரி முதல்வர் (பொ) முனைவர் மு. அன்பழகன் தலைமையேற்றுத் தொடங்கி வைத்தார்.

தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் கா.காளிதாஸ், கணிதவியல் துறைத்தலைவர் முனைவர் ப. கிளாடிஸ், வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் கு. சீனிவாசன், கல்லூரிக் கண்காணிப்பாளர் பா. மகாராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அறந்தாங்கி உணவுப் பாதுகாப்பு அலுவலர் எம்.அந்தோணி பிரபு, ஆவுடையார் கோயில் உணவுப் பாதுகாப்பு அலுவலர் ஆர்.வினோத்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று, போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு மற்றும் உணவுப்பொருள் கலப்பட விழிப்புணர்வு குறித்த சிறப்புரை ஆற்றினர்.

தொடர்ந்து போதைப்பொருள் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழியை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

இக்கருத்தரங்கில் கல்லூரியைச் சேர்ந்த 200 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பங்கேற்று பயனடைந்தனர்.

முன்னதாக கல்லூரி போதைப்பொருள் தடுப்புக்குழு ஒருங்கிணைப்பாளர் முனைவர் த.செந்தில்குமார் அனைவரையும் வரவேற்றார். நிறைவாக மூத்த நாட்டு நலப்பணித்திட்ட மாணவி சந்தியா நன்றி கூறினார்.

கருத்தரங்க ஏற்பாடுகளைக் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட தன்னார்வ மாணவ, மாணவியர் செய்திருந்தனர்.

# திருவள்ளூரில் உள்ள ஸ்ரீ வைத்திய வீரராகவப் பெருமாள் கோயிலில் மஹாளய அமாவாசையை முன்னிட்டு ஆயிரக்கணக்கான பக்தர்கள் முன்னோர்களுக்கு தர்ப்பணம்



திருவள்ளூர் அக் 11 :

திருவள்ளூரில் உள்ள பிரசித்தி பெற்ற 108 திவ்ய தேசங்களில் ஒன்றான ஸ்ரீ வைத்திய வீரராகவப் பெருமாள் கோயிலில் அமாவாசை தினத்தன்று பக்தர்கள் கலந்து கொண்டு வழிபடுவது உண்டு. அதிலும் குறிப்பாக மஹாளய அமாவாசை தினத்தில் பக்தர்கள் அதிக அளவில் வழிபடுவது வழக்கம்.

இந்த அமாவாசை நாளில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்தால் புண்ணியம் கிடைக்கும என்பதாலும், முன்னோர்களின் ஆசிர்வாதம் கிடைக்கும் என்பதால் திருவள்ளூர் மாவட்டம் மட்டு மல்லாது சென்னை, காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை மற்றும் ஆந்திர மாநிலத்தில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்ரீ வைத்திய வீரராகவப் பெருமாள் கோயில் அருகில் குளத்தில் முன்னோர்களுக்கு ஆயிரக் கணக்கான பக்தர்கள் தர்ப்பணம் கொடுத்து வருகின்றனர்.

நோய்கள் தீர்க்கவும், தடைபட்ட திருமணம் நடக்கவும், குழந்தை பாக்கியம் கிடைக்கவும் வீரராகவப் பெருமாளை வழிபட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்து வருகின்றனர். அதே நேரத்தில் உற வினர்கள் இறந்திருந்தால், இந்த வீரராகவர் கோயிலில் இரவு தங்கினால் புண்ணியம் கிடைக்கும் என்பதாலும் ஏராளமான பக்தர்கள் இங்கு இரவு நேரங்களில் கோயில் அருகே தங்கியும், வீரராகவரை தரிசித்துவிட்டு செல்கின்றனர்.



விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட பாண்டியன் நகர் பகுதியில் உள்ள மழைநீர் வெளியேற்றும் இடத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான் நேரில் பார்வையிட்டு ஆய்வுசெய்தார்.

## மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் தவெக வெற்றி : திருவள்ளூர் வடமேற்கு தவெக சார்பில் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாட்டம்



திருவள்ளூர் அக் 11 :

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் இடைத்தேர்தலின் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. இதில் தமிழக வெற்றி கழகம் தொடர்ந்து முன்னிலை பெற்று வெற்றியும் பெற்றது.

இதனையடுத்து திருவள்ளூர் வடமேற்கு மாவட்ட செயலாளரும் திருவள்ளூர் மாவட்ட சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர்.டி. அருண் குமார் அறிவுறுத்தலின் பேரில் இணை செயலாளர் எம்.டி.மணி ,நகர செயலாளர் எஸ்.எஸ்.கலை ஏற்பாட்டில் திருவள்ளூர் நகரில் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி உற்சாகமாக கொண்டாடினர்.

அதே போல் திருவள்ளூர் ஆயில் மில் பகுதியில் பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆர். பிரகாசம் மற்றும் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுடன் பட்டாசுகள் வெடித்து இருசக்கர வாகன ஓட்டிகள் பேருந்தில் பயணிக்கும் பயணிகளுக்கு இனிப்புகள் வழங்கி கோஷங்கள் எழுப்பி மகிழ்ச்சியை கொண்டாடி மகிழ்ந்தனர்.

## அனுமதியின்றி செயல்படும் குவாரி மீது நடவடிக்கை: அமைச்சர் பிரபு தகவல்

பரமக்குடி: அக்.11–

தமிழகத்தில் அனுமதியில்லாமல் செயல்படும் மணல், கல் குவாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என கனிமவளத் துறை அமைச்சர் பிரபு தெரிவித்தார்.

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் உள்ள இமானுவேல் சேகரனாரின் மணிமண்டபத்தில் அவரது 102வது பிறந்த நாள் விழா அரசு சார்பில் நேற்று நடைபெற்றது. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் மதன்ராஜா, கனிம வளத் துறை அமைச்சர் பிரபு ஆகியோர் இமானுவேல் சேகரனாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர் பல்வேறு துறைகளின் சார்பில் 76 பேருக்கு ரூ.78.95 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் பிரபு கூறும்போது, “தமிழகத்தில் அனுமதி இல்லாமல் செயல்படும் கல் மற்றும் மணல் குவாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அனுமதி பெற்ற குவாரிகளில் இருந்து கல், மணல் எடுத்துச் செல்லும் லாரிகளில் ஜிபிஎஸ் கருவி கட்டாயமாக பொருத்தப்பட வேண்டும் என்ற நடைமுறை செயல்படுத்தப்பட்டு வருகிறது” என்றார்.

## 25% ஆலைகள் மூடல்.. அரிசி விலை உயரும் அபாயம்: அரசு தீர்வு காண தென்காசி ஆலை உரிமையாளர்கள் கோரிக்கை

தென்காசி: அக்.11–

காலம் தவறி பெய்யும் பருவமழை, விளைநிலங்கள் வீட்டுமனைகளாக மாற்றப்படுவது போன்ற காரணங்களால், ஒவ்வொரு ஆண்டும் நெல் மகசூலில் பற்றாக்குறை மாநிலமாகவே தமிழகம் உள்ளது.

இதனால், தனியார் அரிசி ஆலைகள் தேவைக்கேற்ப வெளி மாநிலங்களில் இருந்து நெல் அல்லது அரிசியை வாங்குகின்றன. தென்காசி மாவட்டம் கீழப்பாவூர், ஆலங்குளம் வட்டாரங்களில் சுமார் 130 அரிசி ஆலைகள் இயங்கிவந்தன. கடந்த சில மாதங்களாக உற்பத்தி செலவு அதிகரிப்பால், அரிசி ஆலைகள் இயக்கத்தை நிறுத்தி வைத்துள்ளன.

இதுகுறித்து தென்காசி மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல் அரிசி வியாபாரிகள் சங்கத் தலைவர் சி.அன்பழகன் கூறியதாவது: தமிழகத்தில் அதிக நெல் விளைச்சல் தரும் டெல்டா மாவட்டங்களில், கார் சாகுபடி பொய்த்ததால் நெல் உற்பத்தி குறைந்துவிட்டது.

இங்கு குறைந்தளவு உற்பத்தியாகும் நெல்லையும் கொள்முதல் செய்யும் அரசாங்கம், அதை முறையாக பாதுகாக்காமல் மழையில் நனையவிட்டு வீணாக்குகிறது. இதனால், தனியார் ஆலைகள், வெளி மாநிலங்களில் இருந்து அதிக விலை கொடுத்து நெல் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

வங்கிகளில் அதிக கடன் பெற்று, ஆலைகளில் அதிநவீன இயந்திரங்களை நிறுவியுள்ளோம். வங்கிக்கடன் வட்டி உயர்ந்துவிட்டது. மின் கட்டண உயர்வு ஆண்டுக்கு 6 சதவீதமும், மின் நிலுவைக் கட்டணம் எல்.டி. இணைப்புக்கு வாட்டுக்கு ரூ.35ல் இருந்து ரூ.170 ஆகவும் உயர்ந்துள்ளது. தொழிலாளர்களை வெளி மாநிலங்களில் இருந்து அழைத்து வந்து, உணவு மற்றும் தங்கும் வசதி செய்து கொடுத்து, ஆலைகளை இயக்க வேண்டியுள்ளது.

5 கிலோ, 10 கிலோ பைக்கு 5 சதவீத ஜிஎஸ்டி வரிவிதிப்பு, மின் தட்டுப்பாடு காலங்களில் ஜெனரேட்டர் இயக்கும் டீசல் விலை உயர்வு, பணியாளர்கள் கூலி உயர்வு, வாகன செலவு உயர்வு போன்ற காரணங்களால் அரிசி உற்பத்தி செலவும் அதிகரித்துவிட்டது.

நெல் தட்டுப்பாடு காரணமாகவும், உற்பத்தி செலவு அதிகரிப்பாலும், கடனுக்கான தவணைத் தொகை கட்ட முடியாமலும், தென்காசி மாவட்டத்தில் 20 முதல் 25 சதவீத நவீன அரிசி ஆலைகள் மூடப்பட்டுவிட்டன. மற்ற மாவட்டங்களிலும் இதே நிலைதான் ஏற்பட்டுள்ளது. அரிசி உற்பத்தியை நிலைப்படுத்த ஆலைகளுக்கு தேவையான உதவிகளை அரசு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் உற்பத்தி குறைந்து, விலை உயர்வை தடுக்க முடியாத நிலை ஏற்படும்.

## அ.தி.மு.க.வின் 55ஆம் ஆண்டு தொடக்கம்: தமிழ்நாடு முழுவதும் பொதுக்கூட்டங்கள் அறிவிப்பு

சென்னை, அக்.11–

அ.தி.மு.க.வின் 55ஆம் ஆண்டு தொடக்க நாளையொட்டி அக்.17, அக்.22, 23ம் தேதிகளில் தமிழ்நாடு முழுவதும் பொதுக்கூட்டங்கள் நடைபெறும் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார். .தொடக்கவிழா பொதுக்கூட்டம் அ.தி.மு.க.வின் 55ஆவது ஆண்டை முன்னிட்டு தொடக்கவிழா பொதுக்கூட்டம் அக்.17, 22, 23 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது..எடப்பாடி பழனிசாமிஅக்.17ம் தேதி செங்கல்பட்டு மேற்கு மாவட்டத்தில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பங்கேற்க உள்ளதாக அ.தி.மு.க. தலைமை அறிவித்துள்ளது. முன்னாள் அமைச்சர்கள் தங்கமணி, கே.பி.அன்பழகன் மற்றும் எஸ்.பி.வேலுமணி, நத்தம் விஸ்வநாதன் உள்ளிட்டோர் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. சி.வி.சண்முகம் பெயர் பட்டியலில் இடம்பெறவில்லை

## விமானி ஸ்மிட் மச்சாருக்கு ஜனாதிபதி விருது: நயினார் நாகேந்திரன் வாழ்த்து

சென்னை: அக்.11

விமானி ஸ்மிட் மச்சாருக்கு இஸ்ரேல் நாட்டின் உயரிய விருதான ‘குடிமக்கள் வீர தீர செயலுக்கான ஜனாதிபதி விருது’ அறிவிக்கப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் அளிக்கிறது என்று பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வாழ்த்து தெரிவித்துள்ளார்

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், துபாயிலிருந்து இஸ்ரேலின் டெல் அவிவ் நகருக்குச் சென்ற விமானத்தில் பயங்கரவாதத் தாக்குதல் முயற்சி நடைபெற்றபோது, அசாத்திய துணிச்சலுடனும், சாதுரியத்துடனும் செயல்பட்டு 170 பயணிகளின் உயிர்களைக் காப்பாற்றிய விமானி ஸ்மிட் மச்சார் அவர்களுக்கு இஸ்ரேல் நாட்டின் உயரிய விருதான ‘குடிமக்கள் வீர தீர செயலுக்கான ஜனாதிபதி விருது’ அறிவிக்கப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் அளிக்கிறது.

ஆபத்தான சூழ்நிலையிலும் பதற்றத்திற்கு இடமளிக்காமல், தனது உயிரைப் பற்றிக்கூட கவலைப்படாமல் பயணிகளின் பாதுகாப்பை முன்னிறுத்திச் செயல்பட்ட அவரது வீரமும், கடமையுணர்வும் போற்றுதலுக்குரியவை. 170 பயணிகளின் உயிர்களைக் காப்பாற்றிய அவரது துணிச்சலான செயல், மனித உயிர்களின் மதிப்பையும், தன்னலமற்ற சேவையின் மகத்துவத்தையும் உலகிற்கு உணர்த்துகிறது.

தனது வீரச் செயலால் பல உயிர்களைக் காப்பாற்றி, சர்வதேச அளவில் உயரிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ள விமானி ஸ்மிட் மச்சார் அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது துணிச்சலும், அர்ப்பணிப்பும் அனைவருக்கும் உத்வேகம் அளிக்கட்டும் என்று அவர் கூறியுள்ளார்.

## தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலக கோரி சென்னையில் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் கைது!

சென்னை: தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தனது பதியிலிருந்து விலக வேண்டும் என்பதை வலியுறுத்தி சென்னையில் இளைஞர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். நேற்று காலை சென்னை பெசன்ட் நகரில் இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட போது போலீசார் அவர்களை வலுக்கட்டாயமாக கைது செய்தனர்.

இதனை தொடர்ந்து, தற்பொழுது சென்னை சேப்பாக்கம் சிவானந்தா சாலையில் இளைஞர்கள் ஒன்றுகூடி போராட்டம் மேற்கொண்டனர். இந்நிலையில் அவர்களையும் போலீசார் குண்டுக்கட்டாக கைது செய்தனர்.

ஷிமிஸி விவகாரத்தில், தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் உடனடியாகப் பதவி விலகக் கோரி பல்வேறு அமைப்புகளும் கட்சிகளும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன. டெல்லிப் போராட்டத்திற்கு ஆதரவு அளிக்கும் வகையிலும், தேர்தல் ஆணையரின் நடவடிக்கை களைக் கண்டித்தும் சென்னையில் இளைஞர்கள் திரண்டு திடீரென போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

அனுமதியின்றி போராட்டத்தில் ஈடுபட்டதாகக் கூறி, அங்குபாதுகாப்புப்பணியில்ஈடுபட்டிருந்தகாவல்துறையினர் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களைக் குண்டுக்கட்டாகத் தூக்கிச்சென்றுகைதுசெய்தனர்.மேலும், தலைமைச்செயலகத்தைமுற்றுகையிடசென்றமாணவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

## நான்காம் புரட்டாசி சனிக்கிழமை ஒட்டி போச்சம்பள்ளி பகுதிகளில் உள்ள பெருமாள் கோயில்களில் திரளான பக்தர்கள் சுவாமி தரிசனம்.



புரட்டாசி மாத நான்காம் சனிக்கிழமையை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள அரசம்பட்டி, பண்ணந்தூர், பாரூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் உள்ள பெருமாள் கோயில்களில் அதிகாலை முதலே சிறப்பு வழிபாடுகள் நடந்து பெருமாளுக்கு தீபாராதனைகள் காண்பிக்கப்பட்டன.

அதேபோல், பண்ணந்தூர் அடுத்த பாப்பாரபட்டி பகுதியில் உள்ள சென்றாய பெருமாள் திருக்கோயிலில் நான்காம் சனிக்கிழமையை ஒட்டி மூலவர் ஸ்ரீ சென்றாய பொருமாளுக்கு அதிகாலை திருமஞ்சனம், பால், தயிர், சந்தனம், பன்னீர் உள்ளிட்ட பல்வேறு திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு, மகா தீபாரதனை கான்பிக்கப்பட்டது. பின்னர் மலர் அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இதில் ஏராளமான பொதுமக்கள், பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று “கோவிந்தா... கோவிந்தா...” என முழக்கமிட்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

## சென்னையில் நடந்த தமிழருவி கலை இலக்கிய மன்றத்தின் முப்பெரும் விழாவில் கவிஞர் திரைப்பட பாடலாசிரியர் புதுயுகத்திற்கு ஏபிஜே அப்துல் கலாம் விருது



சென்னையில் நடந்த தமிழருவி கலை இலக்கிய மன்றத்தின் முப்பெரும் விழா நிகழ்வில் எது மனித அடையாளம் எனும் தொகுப்பு நூல் வெளியீடு மற்றும் ஏவுகணை நாயகன் ஏபிஜே அப்துல் கலாம் விருதுகள் வழங்கும் விழா சென்னை ரெட்டேரி ஜங்ஷன் கொளத்தூர் ராதாகிருஷ்ணன் மண்டபத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது

இந்த நிகழ்விற்கு கவி பொறிஞர் திரு மு.சுப்பையா அவர்கள் தலைமை தாங்கினார் பாவலர் திரு.பொன் ஜோசப் அவர்கள் முன்னிலை வகித்தார்

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்களை தமிழருவி கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் திரு. ஏ.கோபிநாதன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்

எது மனித அடையாளம் தொகுப்பு நூலை திரு.நீ.கௌதம் நீதி மன்னன் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மேலாளர் சென்னை வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார்

தமிழகம் முழுக்க பல்வேறு மாவட்டத்திலிருந்து வந்திருந்த அனைத்து கவிஞர்களுக்கும் பல சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன அதில் திரைப்பட நடிகர் நாதன் ரகுநாதன் திருப்பூர் அவர்கள் பொற்கரத்தால் கவிஞர் திரைப்படப் பாடலாசிரியர் ஜெ.ம.புதுயுகம் அவர்களுக்கு ஏவுகணை நாயகன் ஏபிஜே அப்துல் கலாம் விருது வழங்கப்பட்டது முடிவில் முனைவர் சத்திய சாயிநாதன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்

## 4 ஆயிரம் பொம்மைகளுடன் பிரமாண்ட கொலு கண்காட்சி: கொளத்தூரில் இன்று துவங்குகிறது

சென்னை: அக்.11–

தமிழகத்தில் ஆண்டுதோறும் விஜயதசமியை முன்னிட்டு பல்வேறு இடங்களில் பிரமாண்டமாக கொலு வைத்து கண்காட்சி கொண்டாடப்படுகிறது. அந்த வகையில், சென்னையில் கொளத்தூர் ஜிகேஎம் காலனி 36வது தெருவில் உள்ள நவராத்திரி கோயிலில் ஆண்டுதோறும் பிரமாண்டமாக கொலு கண்காட்சி வைப்பது வழக்கம். இந்தாண்டு நான்காயிரம் பொம்மைகளுடன் பிரமாண்ட கொலு கண்காட்சி வைக்கப்பட்டுள்ளது. சிறப்பு அம்சமாக ஆன்மிக நிகழ்வுகளை குறிக்கும் வகையில், சிவன் மற்றும் பார்வதியை விநாயகர் சுற்றிவந்து மாம்பழத்தை பெற்று கொள்வது போன்றும், இதனை பார்த்து முருகர் கோபித்து கொண்டு செல்வது போன்றும் மிக தத்ரூபமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.இடம் ஆராய்

இதுபோன்று சிவபெருமானுக்கு விநாயகர் மற்றும் முருகர் சேர்ந்து அபிஷேகம் செய்வது போன்ற காட்சிகள் மிகவும் தத்ரூபமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கொலு கண்காட்சி நாளை தொடங்கி வரும் 20ம் தேதி வரை நடைபெற உள்ளது. தினமும் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை கொலு கண்காட்சி நடைபெறுகிறது. கொலு கண்காட்சியை ஆர்ஆர்ஆன்மீக அறக்கட்டளையின் சார்பில் டி.ஆர்.குணசேகர், டி.ஆர்.வேலுமணி, எல்.கஜேந்திரன் ஆகியோர் ஒருங்கிணைத்து நடத்தி வருகின்றனர். கொலு கண்காட்சியை புண்ணியகோட்டி மதுரை முத்து சுவாமிகள் நாளை காலை 9 மணி அளவில் கொடியேற்றி துவக்கி வைக்கிறார்.

## போச்சம்பள்ளி எம்.ஜி.எம். மெட்ரிக் பள்ளியில் விமரிசையாக நடந்த 12வது ஆண்டு விளையாட்டு விழா.




கிருஷ்ணகிரி. அக்.11–

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளியில் உள்ள எம்.ஜி.எம். மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின 12 வது ஆண்டு விளையாட்டுப் போட்டி உற்சாகத்துடனும் கோலாகலத்துடனும் நடைபெற்றது. பள்ளியின் நிறுவனரும் தொழிலதிபருமான ஜி.பி. பன்னீர் அறிவுருத்தலின் பேரில் தாளாளர் மாதவி பன்னீர், சி.இ.ஓ. செந்தூரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை இயக்குநர் செல்வராஜ் அனைவரையும் வரவேற்றர்.

விழாவின் சிறப்பு அழைப்பாளராகப் போச்சம்பள்ளி காவல் ஆய்வாளர் வனிதாமணி கலந்துகொண்டு பள்ளியில் தேசிய கொடியை ஏற்றி விழாவைத் தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, ஒலிம்பிக் சுடர் போன்ற விளையாட்டுத் தீபத்தைப் பள்ளியின் விளையாட்டுத் தலைவர்கள் மைதானத்தைச் சுற்றி ஏந்தி வந்து முறைப்படி சுடரை ஏற்றி விளையாட்டுப் போட்டிகளைத் துவக்கி வைத்தனர்.

விளையாட்டுப் போட்டிகளுடன் சேர்த்து, மாணவ மாணவிகளின் உடற்பயிற்சி திறன்கள், மாணவர்களுக்கு 100 மீட்டர், 200 மீட்டர் ஓட்டப் பந்தயம், கைப்பந்து,கோகோ, 500 மீட்டர் தொடர் ஓட்டப் பந்தயம், டென்னிஸ், செஸ் போன்ற அனைத்து போட்டிகளிலும் மாணவர்கள் பலர் கலந்து கொண்டு பரிசுகளை வென்றனர். பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்து, மாணவர்களின் பன்முகத் திறமைகளை வெளிப்படுத்தின.

விழாவின் நிறைவாக, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கும், ஒட்டுமொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் சிறந்து விளங்கியவர்களுக்கும் சிறப்பு விருந்தினர்கள் பதக்கங்கள், சான்றிதறிகள் மற்றும் கோப்பைகளை வழங்கிப் பாராட்டினர்.

இந்நிகழ்ச்சியில் பள்ளியின் இருபால் ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியாக, பள்ளி இவ்விழாவை பள்ளி பள்ளி முதல்வர் ஹசினாபேகம் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421, 9750589992